செய்தி வெளியீடு எண். 009/2018 நாள்: 04.01.2018

**வேலூர் செய்தி மக்கள் தொடர்புத் துறை சார்பில் அரசுப் பொருட்காட்சி 2018 இனவரி 2வது வாரத்தில் தொடக்கம் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சி.அ.ராமன், இ.ஆ.ப., அவர்கள் தகவல்!**

வேலூர் மாவட்டம் ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் செய்தி மக்கள் தொடர்புத்துறை சார்பில் அரசுப் பொருட்காட்சி வேலூரில் தொடங்கப்படவுள்ளது. இப்பொருட்காட்சியில் அரசு துறைகள் அரங்குகள் அமைப்பது குறித்து மாவட்ட ஆட்சித் தலைவர் திரு.சி.அ.ராமன், இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் துறை சார்ந்த அலுவலர்களுக்கான ஆலோசனைக் கூட்டம் நடைபெற்றது.

வேலூர் புதிய பேருந்து நிலையம் சாய் சிட்டி சென்டர் தனியார் மைதானத்தில் செய்தி மக்கள் தொடப்புத்துறை சார்பில் அரசுப் பொருட்காட்சி 2018 வருகின்ற இனவரி மாதம் 2ஆம் வார இறுதியில் தொடங்கப்படவுள்ளது. இப்பொருட்காட்சியில் செய்தி மக்கள் தொடர்புத்துறை, சுற்றுலாத்துறை, குறு சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் துறை, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித்துறை, வனத்துறை, வேளாண்மைத்துறை, காவல் துறை, கால்நடை பராமரிப்புத்துறை, மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்பநலத்துறை, கூட்டுறவுத்துறை, வருவாய்த்துறை, சமூக நலத்துறை, தோட்டக்கலைத்துறை, பொதுப்பணித்துறை, இந்து சமய அறநிலையத்துறை, பள்ளிக்கல்வித் துறை, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை, கைத்தறி மற்றும் கதர் கிராமத் தொழில்துறை, நெடுஞ்சாலைத்துறை, போக்குவரத்துத் துறை, மாற்றுத் திறனாளிகள் நலத்துறை, இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை, சுற்றுச் சூழல் துறை, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத்துறை, பிற்படுத்தப்பட்டோர், மிகப் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத்துறை, மீன வளத்துறை, தமிழ்நாடு மின்சார வாரியம், தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம், தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம், கிராம கைத் தொழில் வாரியம், கோ-ஆப்டெக்ஸ், ஆவின், தாட்கோ, வேலூர் மாநகராட்சி, தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம், தமிழ்நாடு உப்பு நிறுவனம், மற்றும் தமிழ்நாடு சிமெண்ட்ஸ் கார்ப்பரேஷன் லிமிடெட் போன்ற பல்வேறு துறை சார்ந்த திட்டங்கள், செயல்பாடுகள், சாதனைகள் குறித்து மக்கள் அறிந்திடும் வகையில் அரங்குகள் அமைக்கப்படவுள்ளது. இப்பொருட்காட்சியில் குழந்தைகள், பெரியோர்களுக்கு உற்சாகமூட்டும் வகையில் பொழுதுபோக்கு அம்சங்கள் அமைக்கப்படவுள்ளது.

அரசுப் பொருட்காட்சியை காண வரும் பொதுமக்களை பாதுகாக்க காவல்துறையின் சார்பில் புற காவல் நிலையம் அமைக்கப்படும், போக்குவரத்து துறைகள் பொருட்காட்சி முகப்பு வாயிலில் போக்குவரத்து சீராக சென்றுவர காவல்துறையினர் பாதுகாப்பு அளிக்க வேண்டும். பொருட்காட்சி மைதானத்தில் பொதுமக்களுக்கு போதுமான அளவு குடிநீர் வசதி கழிப்பிட வசதி செய்து கொடுக்க மாநகராட்சி ஆணையருக்கு அறிவுறுத்தினார். பொருட்காட்சி மைதானத்தில் தினமும் குப்பை மற்றும் கழிவுகளை அகற்ற மாநகராட்சி துப்புரவாளர்களை கொண்டு சுத்தம் செய்ய வேண்டியும், மாநகர ஆணையருக்கு மாவட்ட ஆட்சித்தலைவர் அறிவுறுத்தினார். அரசுப் பொருட்காட்சி நடைபெறும் நாட்களில் தங்கு தடையின்றி மின்சாரம் வழங்க தமிழ்நாடு மின்சார வாரியத்திற்கு அறிவுரை வழங்கினார். தினமும் பொதுமக்கள் வசதிக்காக பொருட்காட்சி நடைபெறும் நாட்களில் இரவு 10 மணிக்கு மேல் அரசு பேருந்துகள் இயக்க வேண்டும். பொருட்காட்சியில் பொதுமக்களின் வசதிக்காக தினமும் மருத்துவர் கொண்ட குழு அமைக்கப்பட்டு சிகிச்சை பிரிவு ஒன்ற அமைக்கப்படும். அசம்பாவிதம் ஏதும் ஏற்பட்டால் தடுக்க தீயணைப்பு வண்டிகளை தயார் நிலையில் பொருட்காட்சி மைதானத்தில் நிறுத்தி வைக்கவும் அரசு அலுவலர்களுக்கு மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சி.அ.ர்ாமன், இ.ஆ.ப., அவர்கள் உத்தரவுகளை வழங்கினார்.

இக்கூட்டத்தில் மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை கூடுதல் இயக்குநர் திரு.பெரியசாமி, கூட்டுறவு சங்கங்களின் இணைப்பதிவாளர் திரு.திருகுணஐயப்பத்துரை, மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் பொது திரு.சண்முகசுந்தரம், செய்தி மக்கள் தொடர்பு அலுவலர் திரு.ச.இளங்கோ, உதவி மக்கள் தொடர்பு அலுவலர்கள் திரு.செ.அசோக், திரு.ந.கோ.நந்தகுமார், மற்றும் பல்வேறு அரசு துறை அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

வெளியீடு:

செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், வேலூர்-9.
04.1.2018